1996 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு பட்டாக்கள் கொடுக்கப்பட்டன என்கின்ற விவரம் என்னிடத்திலே தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலையில் புலியூர், விளாங்குச்சி கூட்டாத்தூர், பலாமருதூர் ஆகிய கிராமங்களில் கிட்டத்தட்ட இரண்டு, மூன்று தலைமுறையாக ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு பயிரிட்டுக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். வனத்துறை அங்கே மரங்களை நடுவதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. நான் அமைச்சரிடத்திலே ஏற்கெனவே சொல்லி மரம் நடுவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே தெரிவித்தபடி அங்கே இருக்கிற, ஜவ்வாது மலைப்பகுதிவாழ் மலைவாழ் மக்களுக்குக் குடியிருப்புகள் அளிக்க அரசு கனிவோடு ஆராய்ந்து வேண்டிய உத்தரவுகளை விரைவில் பிறப்பிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *123*, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

123--

சார் பதிவாளர் அலுவலகம் திறத்தல்

**40277*--திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூர் துடியலூரில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[*1996 பிப்ரவரி 26*

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் அரசினுடைய ஆய்வில் இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அரசினுடைய ஆய்வில் இல்லை என்று கூறினார்கள். துடியலூரில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் கேட்பதற்குக் காரணம், கோவை மாநகர் இராஜ வீதியிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு, 20 கிலோமீட்டர் தூரத்திலிருந்து, புறநகர்ப் பகுதிகளிலே உள்ளவர்கள் கூட மாநகர் பகுதிக்கு வந்து பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. 23 பஞ்சாயத்துக்கள் கொண்ட இந்த யூனியனில் துடியலூர், இராமநாதபுரம், பன்னிமடை, தடாகம் என்கிற பெரிய பேரூராட்சிகள் இருந்தும்கூட, 20 கி.மீ. தூரம் கிராம மக்கள் மாநகர் பகுதியில் உள்ள இராஜ வீதியில் அமைந்துள்ள பதிவு அலுவலகத்திற்கு வரவேண்டி உள்ளது. அதனால் அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அதைப் பிரித்து, துடியலூரில் ஒரு பதிவு அலுவலகம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: *பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரிய நாயக்கன்பாளையம் சார்பதிவகத்தின் ஆட்சிக்குட்பட்ட 16 கிராமங்களில் 5 கிராமங்களைப் பிரித்து துடியலூரில் ஒரு புதிய சார்பதிவகம் திறக்க வாய்ப்பு உள்ளது. பெரியநாயக்கன்பாளையத்திற்கும், துடியலூருக்கும் இடைப்பட்ட தூரம் 8 கி.மீ. பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவகத்திற்கு சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு பதிவாகும் ஆவணங்களின் எண்ணிக்கை 3993. துடியலூரில் புதிய சார்பதிவகம் திறந்தால் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை 2035. புதிய அலுவலகம் திறப்பதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் இதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

திரு. கே. செல்வராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் துடியலூரில் சார்பதிவகம் அமைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னதற்கு அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, அது எந்த நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும், எப்போது திறக்கப்படும், அதற்கு எந்த எந்தப் பகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1996 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிவிக்கப்படாவிட்டாலும்,. எடுத்துக் கொள்ளப்படுகிறபோது முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொ்ள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

124--

மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு கருவிகள் வழங்குதல்

*84281--டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஒரு Body Scan கருவி மற்றும் Steam Laundry ஆகியவை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் WHOLE `Body Scaner' கருவி வழங்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், `Steam Laundry' ஏற்கனவே அங்கு செயல்பட்டு வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ல்டீம் லாண்டரி அமைத்துக் கொடுத்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை சேலம் மற்றும் தர்மபுரி மாவட்ட மக்களுடைய நலனைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், அம்மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால்